DEPOSITION OF WITNESS

CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI

O.S. No. 99 /2024

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகர்சாமி | Father's/Husband's Name : | கொண்டயசாமி |
| Village | : நாச்சியார்புரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 73 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பிரதிவாதிகள் பிராது சொத்து பொறுத்து மோசடி பத்திரம் எழுதி எனக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று கூறி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்தின் சர்வே எண் விஸ்திரணம் நான்கு மால் தெரியுமா என்று கேட்டால் தற்போது ஞாபகம் இல்லை. ஆவணத்தை பார்த்தால் தெரியும். தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் அழகர்சாமி தான். எனது தாத்தா அழகர்சாமிக்கு 3 மனைவிகள் என்றால் சரிதான். அவரது மூத்த மனைவிக்கு எனது அப்பா கொண்டைய சாமியும் எனது பெரியப்பா நாராயணசாமியும் மக்கள் என்றால் சரிதான். எனது பெரியப்பா நாராயணசாமியின் வாரிசுகள் தான் இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தாத்தா அழகர்சாமியின் 2வது மனைவிக்கு சுப்பையா நாயுடு என்று மகன் உள்ளார் என்றால் சரிதான்.

2) அவரது 3வது மனைவிக்கு பிறந்த பிள்ளைகள் பெருமாள் மற்றும் நாராயணசாமி என்றால் சரிதான். மேற்படி எனது தாத்தா அழகர்சாமி மற்றும் அவரது மேற்படி வாரிசுகள் அனைவரும் சேர்ந்து 13.12.1947 ஆம் வருடம் பாகவிஸ்தி பத்திரம் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து மேற்படி பாகவிஸ்தி பத்திரத்தின்படி எனது பெரியப்பா நாராயணசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகவிஸ்தி பாத்திரத்தில் எனது தகப்பனார் கொண்டைய சாமிக்கு சர்வே எண்.589ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சர்வே எண் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எனது பெரியப்பா நாராயணசாமிக்கு 1947 பாகவிஸ்தி பத்திரத்தின்படி தாவா சொத்து கிடைத்து அவருக்கு பிறகு அவரது

வாரிசுகளான பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3) அதன் அடிப்படையில் இந்த பிரதிவாதிகள் தங்களுக்குள் 2023 ஆம் ஆண்டில் ஒரு பாகவிஸ்தி பத்திரம் எழுதிக் கொண்டு அவரவர் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு தற்போது பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். பிராது சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் நாங்கள் எழுதியுள்ள வா.சா.ஆ.1 பாக பாத்திய விடுதலை பாத்திரம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டி உள்ளதாக சொல்லும் கோயில் பிரதிவாதிகளின் சம்மதத்தோடு நானும் பிரதிவாதிகளும் சேர்ந்து கட்டிய கோவில் என்றால் சரிதான். இருவரும் சேர்ந்து கட்டிய கோவில் தான். பிராது சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4) இது சம்பந்தமாக எனது மகன்கள் எனக்கு அறிவுரை வழங்கியும் நான் வேண்டுமென்றே இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, எனது மகன்களுக்கும், இதுக்கும் சம்பந்தமில்லை. எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகள் எந்த தேதியில் எனக்கு இடைஞ்சல் செய்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் 08.08.2024 ஆம் ஆண்டு பிறகு தான் செய்தார்கள் தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் இருக்கிறது என்று சொன்னாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 10.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.10.10 13:35:28 +0530

District Munsif,
Aundipatti.